## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 16.11.2015

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 11.11.2015 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கடவச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு கிருஷ்ணன் என்பவரின் மகன் ராமு;

13.11.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், களமருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பிச்சைக்காரன் என்பவரின் மகன் சுப்பிரமணியன்;

13.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், கோனேரி குப்பத்தைச் சேர்ந்த திரு குமரவேல் என்பவரின் மகன் சதீஷ்குமார்;

14.11.2015 அன்று கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவில் வட்டம், குமராட்சி கிராமத்தைச் சேர்ந்த திரு ராமாமிர்தம் என்பவரின் மகன் பிச்சைமுத்து;

14.11.2015 அன்று கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், கன்னடை கிராமத்தைச் சேர்ந்த திரு குள்ளன் என்பரின் மகன் காளையன்;

15.11.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், வேலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு சொக்கலிங்கம் என்பவரின் மகன் சுப்பிரமணியன்;

15.11.2015 அன்று கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், மதனகோபாலபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு சின்னக்கண்னு என்பவரின் மகன் சாமிக்கண்னு;

—— ஆகியோர் வெள்ளப் பெருக்கின் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

13.11.2015 அன்று கடலூர் மாவட்டம், சி. எண் பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு குண்டுமணி என்பவரின் மகன் காளையன்;

15.11.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கிள்ளியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. லாரன்ஸ் என்பவரின் மனைவி தெரசம்மாள்;

15.11.2015 அன்று கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், மளிகைமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு கருணாம்பு என்பவரின் மகன் ராமசாமி;

15.11.2015 அன்று கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், குறிஞ்சிப்பாடி அம்பேத்கர் நகரைச் சேர்ந்த திரு வெங்கடேசன் என்பவரின் மகன் மணிமாறன்;

–– ஆகியோர் மழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

13.11.2015 அன்று சென்னை மாவட்டம், பெரம்பூர் வட்டம், வியாசர்பாடியைச் சேர்ந்த திரு கண்ணன் என்பவரின் மகன் அருண் என்பவர் மழையின் காரணமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழகத்தில் பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த இந்த **12** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**